பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 26 | வெள்ளிக்கிழமை | 11.08.2023 | அதிர்வு 10

## பயங்கரவாதத் தடைச் சட்ட கைதிகள் 40 பேரே தடுப்பில

அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி அதிகமானவர்களை சிறையில் அடைத்து வருவதாக சிலர் கூறினாலும் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைச் சாலைகளில் சுமார் 03▶

# மலையகத் தமிழருக்கு அனுதாபம் வேண்டாம்; நியாயம் செய்யுங்கள்!



## நாடாளுமன்றில் மனோ முழக்கம்

கொழும்பு, ஓகஸ்ட் 11

மலையகத் தமிழ் மக்கள் இன்று வேண்டுவது எவரதும் அனுதாபங்களும் அல்ல. எமக்குத் தேவை நியாயம்.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் நீதி கேட்டு முழங்கினார் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன். 02▶

# அனைத்துப் பல்கலை மாணவரின் ஆர்ப்பாட்டத்தின் மீது நீர்த்தாரை!

## கிருலப்பனையில் பதற்றம்; 22 பேர் கைது







அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கொழும்பு – கிருலப்பனையில் நேற்றுப் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் கிருலப்பனையில் பதற்றம் நிலவியது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 22 பேர் கைது செய்யப்பட்டனர். 03▶

## சிசுவின் சிதைவுற்ற தலை யாழ் நகரை அண்டி மீட்பு!



– எஸ்.நிதர்ஷன் –

யாழ்பாணம் நகரை அண்டி வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில் கோம் பயன்மணல் சுடலைக்குப் பின்புறமாக லோட்டஸ் வீதியை அண்டி வெளியான பகுதியில் குழந்தை ஒன்றின் சிதைவடைந்த முகத்துடன் கூடிய உடற்பாகம் நேற்று 03▶

## டில்லிக்கான தூதுவர் பதவியை முடிக்கிறார் மிலிந்த மொறகொட




புதுடில்லியில் பணியாற்றும் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தனது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இலங்கை திரும்பவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 03▶

## கொழும்பில் சீனக் கப்பல்



சீனாவின் HAI YANG 24 HAO என்ற போர்கப்பல் நேற்றுக் காலை சம்பிரதாய பயணமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாகக் 03▶

## இரகசியம்



நாட்டின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் மற்றும் மூத்த சில பொலிஸ் அதிகாரிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான சுமந்திரன்,சித்தார்த்தன், செல்வம், 02▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சார்ள்ஸ், சாணக்கியன் ஆகியோர் நேற்று முன்தினம் பொதுப் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தனர் அல்லவா? அப்போது அங்கு பரிமாறப்பட்ட இரண்டு சுவாரஸ்யமான தகவல்களை, நான் சேகரித்த மற்றும் எனக்கு நினைவில் இருக்கின்ற சில தகவல்களுடன் சேர்த்து இன்று வாசக நண்பர்களுடன் பகிரலாம் என நினைக்கிறேன்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ், மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குமாறு தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்தி வருகின்றனர் அல்லவா? அது பற்றிய அவர்களின் கருத்து நிலைப்பாட்டை பொலிஸ் துறைக்குப் பொறுப்பான மத்திய அமைச்சர் செவிமடுக்க எதிர்பார்க்கின்றமையால் இந்தக் கலந்துரையாடல் என்று அந்தச் சந்திப்புக் குறித்து பீடிகை போடப்பட்டிருந்தது.

சந்திப்பின் போது சுமந்திரன் சட்ட நிலைமை பற்றிய வலிதான விடயம் ஒன்றைப் பொதுப் பாதுகாப்பு அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினார்.

13 ஆவது திருத்தத்தின் கீழான பொலிஸ் அதிகாரங்கள் இன்னும் – கடந்த 35 ஆண்டுகளாக – மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. அதை வழங்குவது குறித்து ஆராயும் விடயத்தை நாடாளுமன்றத்தின் களத்துக்குள் அடித்து விட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இது விடயத்தில் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதானால் அது குறித்து நாடாளுமன்றம் தீர்மானிக்க வேண்டும், ஜனாதிபதி முடிவு செய்ய வேண்டும் என்றெல்லாம் பலரும் கூறுகின்றனர். அப்படி ஒன்றுமே இல்லை. ஜனாதிபதி நினைத்தால் நாளைக்கே மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்கள் பிரயோகிக்கும் நிலைமைக்கு செயலுருப் பெற்றுக் கொடுக்க முடியும் என்ற தகவலை பொதுப் பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரியப்படுத்தினார் சுமந்திரன்.

அமைச்சர் ஆச்சரியத்தில் மூழ்கினார். ஏன், நீங்கள் கூட, 'அப்படியா?' என்று ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் அதுதான் உண்மை.

பொதுவாக, கோட்பாடுகளை – தீர்மானங்களை – கொள்கை முடிவுகளை – நாட்டின் அரசமைப்பு பிரதிபலித்து நிற்கும். அந்த முடிவுகளை எப்படி சட்டரீதியாக நடைமுறைப்படுத்துவது அல்லது செயற்படுத்துவது என்பதை சட்டங்களே வழி செய்து ஒழுங்குபடுத்தும். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் கொள்கை ரீதியான தீர்மானம் அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் மூலம் பொறிக்கப்பட்டு விட்டது.

ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதாயின், அதற்குரிய சட்டங்கள் அவசியம். அந்தக் கொள்கைத் தீர்மானத்தை சட்டரீதியாக ஏற்படுத்தும் சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கும் கொள்கைத் தீர்மானம் அரசமைப்பில் 13ஆம் திருத்தம் மூலம் இடம்பெற்றது மட்டுமல்ல, அதையும் தாண்டி, அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமும் கூட பின்னர் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு விட்டது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

'1990 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கச் சட்டம் – அதற்குப் பெயர் 'பொலிஸ் ஆணைக்குழுச் சட்டம்' – நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாகிவிட்டது. தேசிய ரீதியில் பொலிஸ் துறையை செயல்படுத்த தேசிய பொலிஸ் ஆணைக் குழுவும், மாகாணம் தோறும் மாகாணப் பொலிஸ் துறையை செயற்படுத்த மாகாணப் பொலிஸ் ஆணைக் குழுவும் நியமிப்பதிலிருந்து, அனைத்து விடயங்களும் இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. Police Commission Act number one of 1990 என்று இணையத்தில் தட்டச்சு செய்து தேடினால் இச்சட்டத்தின் முழு விவரமும் கிட்டும்.

இந்தச் சட்டத்தை ஜனாதிபதி எப்போது செயற்படுத்துவதற்குத் தீர்மானித்து, திகதியிட்டு, வர்த்தமானியில் அதை அறிவிக்கின்றாரோ, அன்றிலிருந்து அது சட்டமாக ஏற்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அச்சட்டம் கூறுகின்றது.

ஆக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு திகதியைத் தீர்மானித்து, மேற்படி 1990 இன் முதலாம் இலக்க பொலிஸ் ஆணைக்குழுச் சட்டம் அத்திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது என வர்த்தமானி அறிவித்தலை விடுத்தால் போதும், அந்தச் சட்டமும் மாகாண பொலிஸ் முறைமையும் நடைமுறைக்கு வந்துவிடும்.

ஆகவே திரும்பி 13 ஆம் திருத்தம், இந்த விடயம் எல்லாம் நாடாளுமன்றத்தில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டும் என்ற ஜனாதிபதி ரணிலின் பிரலாபம் எல்லாம் வெறும் ஹம்பக். அவரின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்கான மோடிமஸ்தான் வேலைதான் அது.

இனி அடுத்த கொசுறுத் தகவலைப் பார்ப்போம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் 1987 ஜூலை 29ஆம் திகதி செய்யப்பட்டது. அதில் காணப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் 1987 நவம்பர் 14ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

அந்த 13ஆம் திருத்தத்தின் கீழ் மாகாணப் பொலிஸை இயங்க வைப்பதற்கான பொலிஸ் ஆணைக்குழுச் சட்டம் – 1990இன் முதலாம் இலக்கச் சட்டம் – 1990 இல் ஆரம்பத்திலேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது. ஆனால் அது அப்போது உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரப்படாமல் விடுபட்டது ஏன்?

அதன் காரணத்தையும் விளக்கத்தையும் புதனன்று அமைச்சர் ரிரானுடன் நடந்த சந்திப்பின்போது கூட்டமைப்புத் தரப்பு மெல்ல சத்தம் சந்தடியின்றி அவரின் காதில் போட்டு வைத்தது.

அந்தச் சட்டம், 1990 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டம் என்றதுமே, அது 1990 ஜனவரி அளவில் நாடாளுமன்றத்திற்கு வந்திருக்கும் என்பதை நீங்கள் ஊகித்திருப்பீர்கள். அந்த நேர அரசியல் சூழலைச் சற்று எண்ணிப் பாருங்கள்.

இலங்கையை விட்டு வெளியேறுவதற்காக இந்திய அமைதிப்படை தன் மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டிருந்த காலம். வடக்கு, கிழக்கு மாகாண சபையை வைத்திருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். – ஈ.என்.டி.எல்.எவ். அணிகளும் இந்தியப் படைகளுடன் சேர்ந்து மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டிருந்த வேளை. அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் புலிகளுக்கும் இடையிலான தேனிலவுக் காலமும் கூட.

அப்போது மாகாண பொலிஸ் உருவாக்கப்பட்டால், அது, அப்போதைய வடக்கு,கிழக்கு மாகாண முதலமைச்சரான ஈ.பி.ஆர்.எல். எவ்வின் வரதராஜப்பெருமாளின் கீழ் வழிநடத்தப்படும். அதை பிரேமதாஸ அரசுடன் அப்போது பேசிக் கொண்டிருந்த புலிகள் விரும்பவில்லை. ஆகவே பொலிஸ் ஆணைக் குழுச் சட்டத்தை நிறைவேற்றினாலும், அதைச் செயல்படுத்துவதற்கான திகதியை வர்த்தமானியில் அறிவிக்காதீர்கள், அதை தாமதப்படுத்துங்கள்! – என்று ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் அப்போது அவரது ஆத்ம நண்பர்களாக இருந்த புலிகள் கேட்டார்களாம், அதனால் அதை – அந்தச் சட்டத்தை நிறைவேற்றியும், அதைச் செயல்படுத்துவதற்கான திகதியை வர்த்தமானி மூலம் அறிவிக்காமல் இழுத்தடித்தார் பிரேமதாஸா? பிறகென்ன?

1990 ஜுன் முதல் வாரத்தில் புலிகள் – பிரேமதாஸா தேன்நிலவு கலைந்து, யுத்தம் வெடித்தது. அத்தோடு மாகாண சபைகளுக்குப் போதிய அதிகாரத்தை வழங்கும் மாகாண பொலிஸ் ஆணைக் குழுச் சட்டமும், அதை நடைமுறைப்படுத்துவதற்கான திகதியும் ஜனாதிபதியினால் அறிவிக்கப்படாமல் கிடப்பிலேயே போடப்பட்டு விட்டன.

---

## மலையகத் தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

எமது மக்கள் மத்தியில் நிலவும் நவீன அடிமைத்துவ நிலைமைக்கு இலங்கையை மாறி, மாறி ஆண்ட இனவாத அரசுகள், இந்திய அரசு, பிரிட்டிஷ் அரசு ஆகியவை பொறுப்பேற்க வேண்டும். இங்கு நிலவும் பெருந்தோட்ட "துரைமார்–அடிமைத்தனம்" ஒழிய வேண்டும். இனியும் நாம் பொறுக்க முடியாது. "சிலோன் டீ"க்கு எதிராக "இரத்த தேநீர்" என நாங்கள் பிரசாரம் செய்யும் நிலைக்கு எங்களைத் தள்ள வேண்டாம் என எச்சரிக்கிறேன். இந்த நவீன அடிமைத்தனம் இனி முடிவுக்கு வர வேண்டும்.

இன்றைய இந்திய அரசு இதை – எமது நிலையை – உணர்ந்துள்ளது. ஆகவே எமது மக்களின் நல்வாழ்வுக்காக, முதற்கட்டமாக 300 கோடி இலங்கை ரூபாவை பிரதமர் நரேந்திர மோடி நன்கொடையாக ஒதுக்கித் தந்துள்ளார். பிரதமர் மோடிக்கு நன்றி. இந்தியாவுக்கு நன்றி.

இனி இந்தியாவை பின்பற்றி பிரிட்டிஷ் அரசும் ஸ்டேர்லிங் பவுன்ட்ஸ்களை எமக்காக ஒதுக்கி தர வேண்டும் என இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்தபடி, மலையக மக்களின் அதிக வாக்குகளை பெற்ற கட்சியின் தலைவன் என்ற முறையில் நான் கோருகிறேன். இந்தத்

(9ஆம் பக்கம் பார்க்க...)

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சுயாதீன தீர்ப்பு வரும்

பொருளாதார நெருக்கடியினால் வங்குரோத்து நிலையை அடைந்த நமது நாடு, அதனால் பல்வேறு தரப்புகளிடமிருந்தும் முன்னர் தான் பெற்ற கடன்களை மீளச்செலுத்த முடியாத மோசநிலைக்குச் சென்றது. கடனிறுக்க முடியாத நாடு என்ற அவப்பெயரையும் வாங்கிக் கட்டிக் கொண்டது.

அதலபாதாளத்தில் விழுந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்காகவும், வெளிநாடுகள் மற்றும் வெளித் தரப்புகளின் உதவித் திட்டங்களைத் தொடர்ந்தும் பெறும் நிலைமைகளை எட்டுவதற்காகவும், கடன் வழங்கிய தரப்புகளுடன் இணக்கம் கண்டு, கடன் மீளளிப்புக்கான மறுசீரமைப்பு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது இலங்கை.

இதில், உள்நாட்டுக் கடன்களை மீளளிக்கும் மறுசீரமைப்பு திட்டத்தில், இலங்கை அரசு ஓரவஞ்சனையாக நடக்கின்றது என்ற குற்றச்சாட்டு எழுந்தமையை அடுத்து இவ்விடயம் உயர் நீதிமன்றத்திற்குப் போய் உள்ளது.

பிணைமுறி போன்றவை மூலம் அரசுக்குக் கடன் கொடுத்த பெரும் பண முதலாளிகளை, இந்தக் கடன் மறுசீரமைப்பின் போது பேணிப் பாதுகாக்கும் அரசு, அப்பாவித்தொழிலாளர்களின் சேமலாப நிதியம் போன்ற சேமிப்புகளில் இருந்து தான் வாங்கிய கடன் விடயத்தில் மட்டும், அடாத்தான போக்கைக் கையாண்டு, அந்தக் கடன் மீள் செலுத்துகையில் மட்டும் பாதிப்புகளை ஏற்படுத்தும் திட்டத்தை முன்னெடுக்கிறது.

அதனால் இவ்விடயம் இப்போது உயர்நீதிமன்றுக்குப் போய் இருக்கின்றது.

"இது, நாடாளுமன்றுக்குரிய நியாயாதிக்க விடயம். இதில் வேறுதரப்புக்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களை ஏற்க மாட்டேன்!" - என்ற சாரப்பட நேரத்துடனேயே அறிவித்து, உயர் நீதிமன்றுக்கு அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

போதாக்குறைக்கு இதே போன்ற கருத்தை நாடாளுமன்ற சபாநாயகரும் பகிரங்கமாக வெளியிட்டு, உயர் நீதிமன்றுக்கு எதிராக நியாயாதிக்கச் சவால் ஒன்றைக் கிளப்பி விட்டிருக்கின்றார்.

எனினும் உயர் நீதிமன்றம் மேற்படி விடயம் தொடர்பான நான்கு வழக்குகளையும் நேற்றே பரிசீலிக்கத் தொடங்கிவிட்டது.

அரசு பெற்ற பிணைமுறி போன்ற கடன்கள் விடயத்தில், கடன் நிபந்தனைகளை மாற்றி அமைக்கும் அதிகாரம், சட்டத்தின் மூலமாகவே நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதைப் பிரயோகித்தே, நீதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான அரசின் முடிவுகளை வெளியிட்டுள்ளார் என்பதை ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நேற்று உயர் நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டி உள்ளார்.

சட்டத்தின் மூலமான அதிகாரம் என்பதால், அதைப் பிரயோகிப்பதில் அநியாயம், தவறு இழைக்கப்படுகின்ற போது, அதில் நீதிமன்றம் தலையிட முடியும், தலையிட வேண்டும் என்ற சுமந்திரனின் நேற்றைய சட்ட வாதம், வழக்கை விசாரிக்கும் நீதியரசர்களினால் நேற்றுக் காத்திரமாக உள்வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஜனாதிபதியினதும், சபாநாயகரினதும் அத்துமீறிய செல்வாக்கை - தலையீட்டை - கருத்து நிலைப்பாடை - பொருட்படுத்தாமல் உயர் நீதிமன்றம் இவ்விடயத்தில் சுயாதீனமாகத் தீர்ப்பு வழங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## அனைத்துப் பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் மதுசான் சந்ரஜித் உள்ளிட்ட 10 பேருக்கு கொழும்பின் பல இடங்களுக்குள் நேற்று உட்பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிசுவின் சிதைவுற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை மீட்கபட்டுள்ளது.

அயலவர்களால் சடலத்தின் உடற்பாகம் அவதானிக்கப்பட்டு, இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் உடற்பாகம் காணப்பட்ட இடத்தை அடையாளபடுத்தியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ள நிலையில் சட்ட வைத்தி. அதிகாரி சம்பவ இடத்திற்கு விரைந்து ஆராய்ந்தார்.

அண்மையில் உள்ள கோம்பயன்மணல் சுடலைப் பகுதியில் இருந்து விலங்குகளால் இந்த உடற்பாகம் எடுத்துவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டது.

## டில்லிக்கான தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது பதவியில் இருந்து விலகுவதற்கான அவரின் தீர்மானம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராஜதந்திரி என்ற தொழிலைக் கொண்டிராத அரசியல்வாதியான மிலிந்த மொறகொட, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பது மற்றும் பலப்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் பல பணிகளை அவர் மேற்கொண்டிருந்தார்.

உயர்ஸ்தானிகராக இருந்த காலத்தில் மொறகொட, இலங்கை மற்றும் இந்தியாவின் மின்சாரச் சுற்றுக்களை ஒன்றோடொன்று இணைப்பது உட்பட்ட முயற்சிகளில் கவனம் செலுத்தி, இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ஒரு விரிவான மூலோபாயத்தை உருவாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தடைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

40 பேரே இருக்கின்றனர் என்று நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சிறைக்கைதிகளுக்கு முறையாக உணவு வழங்கப்படுவதில்லை என்று ஒரு சிலர் குற்றஞ்சாட்டினாலும் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியிலும் சிறைக்கைதிகளுக்கு உணவு வழங்க மாத்திரம் அரசாங்கம் வருடாந்தம் 390 கோடி ரூபா நிதியை செலவிட்டு வருவதாகக் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், 2021-2022 காலப் பகுதியிலும் கூட இதற்கான நிதியை ஒதுக்கி இருந்ததாகவும் தெரிவித்தார்.

## கொழும்பில் சீனக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

கடற்படை தெரிவித்துள்ளது.

129 மீற்றர் நீளம் கொண்ட இந்த கப்பலில் 138 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். மற்றும் கமாண்டர் ஜின் சின் தலைமை தாங்குகிறார்.

இந்த கப்பல் ஆகஸ்ட் நாளை இலங்கையில் இருந்து புறப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் வாக்களிக்கும் முறைமை குறித்து ஆராய்வு




இணையவழி தொழிநுட்பத்தின் ஊடாக வாக்களிப்பை பதிவு செய்யும் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் இதன் ஊடாக வாக்களிப்பில் பதிவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு உள்ளிட்ட சார்க் நாடுகளுக்கு விசேடமான விசா வகையொன்றை உருவாக்குவதற்கான அவசியம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.



சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவிலேயே இவ்விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் கூடியபோதே இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

சார்க் பிராந்திய நாடுகள் தொடர்பில் இலங்கை கொண்டிருக்கும் வெளிநாட்டுக் கொள்கை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு போன்ற சார்க் பிராந்திய நாடுகளுக்கு விசேடமான விசா வகையொன்றை உருவாக்க வேண்டியது அவசியம் எனக் குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ அங்கு தெரிவித்தார்.

இதன்காரணமாக, இந்த நாடுகளுக்கு இணக்கமான முறையில் விசா வழங்கும் முறையை தயாரிக்க குழு முன்மொழிவதாகத் தெரிவித்தார்.

மேலும் வெளிவிவகார அமைச்சின் கீழ் உள்ளகப் பயிற்சித் திட்டத்தைத் (Internship Program) தொடங்குவது குறித்தும் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் முறைமையொன்றை அமைப்பது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டது.

சுற்றறிக்கையின் பிரகாரம், வெளிவிவகார அமைச்சின் கீழ் உள்ளகப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தற்போதைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் இந்த வேலைத்திட்டம் மிகவும் சம்பிரதாயமான முறையில் திறந்த வேலைத்திட்டமாக தயாரிக்கப்பட வேண்டுமென நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக வாக்களிப்பை பதிவு செய்யும் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் இதன் ஊடாக வாக்களிப்பில் பதிவு செய்ய முடியும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்படி, சபாநாயகருடன் கலந்தாலோசித்து இதற்கான அமைப்பை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.




இதனால் அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் வெளிநாட்டவர்களும் இணைந்து கொள்ள முடியும் எனவும் குழு சுட்டிக்காட்டியது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வெளிவிவகார அமைச்சின் கீழ் பல விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.





# ‘மலையக எழுச்சிப் பயணம்’ நாளை மாத்தளையில் நிறைவு

## அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு

“மாண்புமிகு மலையக மக்கள்” - கூட்டிணைவினால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த ஜுலை 28ஆம் திகதி தலைமன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட மலையக எழுச்சிப் பயணத்தின் நிறைவு நாள் நிகழ்வு மாத்தளையில் நாளை ஓகஸ்ட்12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் அனைவரையும் பங்குபெறுமாறு அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான அருட்திரு செங்கன் தேவதாஸன் கேட்டுக் கெண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அருட்திரு செங்கன் தேவதாசன் –

“மலையகம் – 200“ எழுச்சிப் பயணத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் மாத்தளை சிறி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பல்வேறு நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

காலைவேளையில் இறுதி நாள் நிகழ்வு ஆரம்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து தலைமன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நடை பயணம் மாத்தளையை வந்தடைந்த பின் 12:30 மணிக்கு இறுதிநாள் நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன.

மலையக மக்களின் வருகையின் 200 ஆவது வருடப் பூர்த்தியை நினைவுகூரும் மலையகத் தமிழ் சமுதாயத்தினர், முழுமையான மற்றும் சமமான பிரசைகளாக, அர்த்த பூர்வமாகப் பங்கேற்பதற்காக 11அம்ச கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

தலை மன்னார் முதல் மாத்தளை வரையான நடைபயணம் இப்பிரதிபலிப்பின் பகுதியொன்றாக அமைவதற்கு மேலதிகமாக, அவர்களின் முறையீட்டிற்கு ஆதரவளிக்கும் ஓர் ஆதரவுப் பயணமாக இந்த நடைப்பயணம் அமைந்திருந்தது.




மலையக எழுச்சிப் பயணத்தின் ஆரம்பம் முதல் ஒவ்வொரு நாள்களிலும் ஒவ்வொரு பொழுதுகளிலும் எங்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்கிய, உதவிகள் நல்கிப் பங்களிப்புச் செய்து அனைத்து வழிகளிலும் தோளோடு தோள் நின்ற அரசியல் தரப்பினர், சமூக மட்ட அமைப்புகள், சிவில் சமூகத்தினர், வர்த்தகர்கள், பொது மக்கள் என அனைவருக்கும் இந்த இடத்தில் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாத்தளையில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வில் சந்திப்போம். – என்று தெரிவித்தார்.

# விவசாயிகளுக்கு யூரியா இலவசமாக விநியோகம்

## ஜப்பான் தூதர் பங்குபற்றினார்



ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக யாழ் மாவட்டத்தில் சிறிய அளவில் நெற் பயிர்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான இலவச யூரியா உரம் இன்று வழங்கியவைக்கப்பட்டது.

யாழ் சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஸ்கோஷி ஹிடோகி, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயம் அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி விஜேந்திர சரண், யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் பிரணவன் தெய்வநாயகி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



இதன் போது சாவகச்சேரி கமல சேவைகள் திணைக்களத்துக்குட்பட்ட 2,777 சிறிய விவசாயிகளுக்கு 25 கிலோ நிறை கொண்ட 3774 யூரியா உரப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை யாழ் மாவட்டத்திற்கு வழங்கவென 25 கிலோ கிராம் கொண்ட 19 ஆயிரத்து 973 யூரியா பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரிரானுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் கலந்துரையாடல்

13ஆம் திருத்தத்தின் கீழ் பொலிஸ் அதிகாரங்களை கோரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கான காரணங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர்விக்கிரமரத்ன ஆகியோருக்கும்இடையில் முக்கிய கூட்டம் நடைபெற்றுள்ளது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு பொலிஸ் அதிகாரங்களைக் கோரியதன் பின்னணியில் உள்ள காரணங்கள் குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இங்கிலாந்து, இந்தியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட அதிகாரப் பகிர்வு மிகச் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டதாக சுட்டிக்காட்டியமையுடன், அங்கு பயன்படுத்தப்படும் அத்தகைய முறைமைகளை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த முடியும் என்றும் விளக்கமளித்தனர்.

இலங்கையின் அரசியல் மற்றும் சமூக கலாசாரம் அந்த நாடுகளிலிருந்து கணிசமாக வேறுபடுவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ரிரான் அலஸ்,பொலிஸ் அதிகாரங்களைப் பிரிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எழுப்பியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான மாற்று வழிகளைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் வெளிப்படுத்தினார்.

தமிழ் மக்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் அமைச்சர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

தற்போதுள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக மாகாண பொலிஸ் ஆணைக்குழுவொன்றை நியமிப்பதன் முக்கியத்துவத்தை யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

வடக்கு பிராந்தியத்தில், குறிப்பாக இளைஞர்களிடையே போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றங்கள் குறித்து அதிகரித்து வருவதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இந்த விடயங்கள் தொடர்பான தகவல்கள் போதைப்பொருள் மற்றும் பாதாள உலக அமைப்புக்களுக்கு எதிராகச் செயற்படும் விசேட பொலிஸ் குழுவுடன் பகிர்ந்து கொள்ளப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசமந்து தென்னகோன் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


இதேவேளை, அடுத்த கலந்துரையாடலை இரண்டு வாரங்களில் நடத்த இரு தரப்பினரும் இணங்கினர் எனப் பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# நல்லூர் கொடிச்சீலைக்கான காளாஞ்சி கையளிப்பு நிகழ்வு



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி ஒற்றைதிருக்கைமாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.





ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் உறசவ காலத்தில் பண்பாட்டைப் பேணுங்கள்!

## கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள்



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி கோவில் திருவிழா காலத்தில் பக்தர்கள் எல்லோரும் சமம் என்கிற தர்மத்தை பேணுகின்ற வகையில் நடந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் ஆலயத் திருவிழா காலங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வரலாற்றுப் பெருமை மிக்க தமிழர்களின் தலையாய திருக்கோவிலாகிய நல்லூர் கந்தசுவாமி கோவில் இம்மாதம் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 25 நாள்கள் சிறப்பு உற்சவம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் தலைமையில் யாழ். மாநகர சபை மண்டபத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில் ஆலோசிக்கப்பட்டபடி, சகல மக்களும் நல்லூர் திருவிழாக் காலங்களில் காலம் காலமாக பின்பற்றுகின்ற ஒழுங்குக் கட்டுப்பாடுகளை பேண வேண்டும்.

குறிப்பாக, ஆலய வழிபாட்டுக்கு வருபவர்கள் வரலாற்றுப் பண்பாடுகளை பேணக்கூடிய வகையில் சைவ பாரம்பரியமான பண்பாட்டு உடைகளை அணிந்து தெய்வ வழிபாட்டுக்கு வருவதே சாலப் பெருத்தமாகும்.

ஆலய சுற்றாடலில் வேறு விடயங்களுக்கு இடமில்லாத வகையில் ஆத்மீகத்தை மட்டும் நேசிக்கின்ற வகையில் சகலரும் அதற்குரியவர்களாக நடந்து கொள்ளவேண்டும்.

நல்லூர் மகோற்சவ காலம் எமது பண்பாட்டு அடையாளத்தை நிரூபிக்கின்ற காலம். எங்களுடைய அடுத்த தலைமுறையை ஆற்றுப்படுத்துகின்ற காலம். எனவே, கோவிலுக்கு வருபவர்கள் குடும்பம் குடும்பமாக வருகை தந்து பக்தி பூர்வமாக வழிபாடு செய்து, கோவில் வீதியில் அமர்ந்து பிரார்த்தனை செய்து மகிழ்ச்சியாக இந்த 25 நாள்களையும் ஒரு தவ வாழ்வாக கருதி வழிபடுங்கள்.

வீண் வார்த்தைகள் பேசாமல், கோவில் வீதியை தெய்விகத்துக்குரிய வீதியாக மாற்றவேண்டிய கடமை பக்தர்களுக்குரியது.

எனவே, நல்லூர் உற்சவ காலத்திலே ஆடம்பரமாக ஆபரணங்கள் அணிந்து, நவநாகரிகமாக பக்தர்கள் வருவதை தவிர்த்து, எளிமையாக வழிபாட்டுக்குரிய தோற்றத்தில் வருகைதந்து, அமைதியாக வழிபாடு செய்வதை கருத்திற் கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

ஆலய வீதியில் வாகனங்களை செலுத்தாதீர்கள். அவை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் வீதிகளாகும்.

என்ன பதவி நிலையை கொண்டவர்களாக இருந்தாலும், எத்தகைய உயர் நிலையை அடைந்தவர்களாக இருந்தாலும், நல்லூர் வீதியில் நடந்து வாருங்கள். இது மிக முக்கியமாகும்.

படித்தவர்கள் உயர் பதவியில் இருப்பவர்கள் முன்மாதிரியாக செயற்பட்டு, நல்லூர் அடியவர்கள் எல்லோரும் சமம் என்கிற தர்மத்தை அனைவரும் பேணுங்கள் என்று அன்பான வேண்டுதலை விடுக்கின்றேன். – என்றார்.

# ஊடகக் கற்கை மாணவரின் 'கனலி' சஞ்சிகை வெளியீடு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் மூன்றாம் வருட மாணவர்களின் ஆக்கங்கள் அடங்கிய "கனலி இதழ்–4 " சஞ்சிகை நேற்று வெளியீடு செய்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் சி.பூங்குழலி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பதில் துணைவேந்தர் செ.கண்ணதாசன், சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீட பீடாதிபதி சி.ரகுராம் ஆகியோர் கலந்துகொண்டனர்.





இந் நிகழ்வில் வாழ்த்துரையை பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர் இயக்குநர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும், கனலி சஞ்சிகை தொடர்பான ஆய்வுரையை யாழ்ப்பாணக் கல்வி வலைய ஆசிரிய ஆலோசகர் ஜோன்சன் ராஜ்குமாரும்,



சஞ்சிகை தொடர்பான மதிப்பீட்டு உரையை சைவசித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரநும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழரை அழித்தொழிக்கும் அரசியலை நிறுத்துங்கள்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

தமிழ் மக்களை அழித்தொழிக்கும் அரசியலை நிறுத்துங்கள் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் சிங்களவ அரசியல் தலைமைகளைக் கோரியிருக்கின்றார்.

முன்னாள் சட்ட அமைச்சரும், வெளியுறவு அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அரசமைப்பின் ஓர் அங்கம் என்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தை நாடவேண்டிய அவசியம் இல்லை என்றும் கடந்த 07.08.2023 திங்கட்கிழமை அன்று தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

அவரது கூற்றுக்கு பதில் அளித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையிலேயே தமிழ் மக்களை அழித்தொழிக்கும் அரசியலைக் கைவிடுமாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரியுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே பிரச்சினைக்குரிய ஒரு விடயமாக மாற்றப்பட்டிருக்கிறது. சிங்களம் மாத்திரம் அரச கரும மொழி, வாகனங்களில் சிங்கள ஸ்ரீ, பல்கலைக்கழகங்களில் தரப்படுத்தல் என்று தொடங்கிய சிங்கள இனவாதமானது வளர்ச்சியடைந்து தமிழ் மக்களின் காணிகளைப் பறித்தெடுத்தல், அவர்களை விரட்டியடித்தல், அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றல் என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்து, இன்றும் புராதான இடங்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளைச் சூறையாடுகின்ற வேலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இதற்கு எதிரான தமிழ் மக்களின் அறவழிப் போராட்டம் அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டதன் காரணமாக தமிழ் மக்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஆயுதம் ஏந்த வேண்டியேற்பட்டது. மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த இந்த யுத்தத்தில், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டமையுடன், ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான வீழ்ச்சியைச் சந்தித்தது. வாங்கிய கடன்களைக் கட்டமுடியாத அளவிற்கு இலங்கை இன்று பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருப்பதுடன், இலங்கையின் நாணயமும் வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

இத்தகைய மோசமான நிலையிலும் கூட, தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு கௌரவமான தீர்வை எட்டுவதற்கு சிங்களத் தரப்பு தயாராக இல்லை என்பதையே அவர்களது நடவடிக்கை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் - சிங்களத் தரப்புகளிடையில் ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்ட போதும் அதனை சிங்கள தரப்பு ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்ததும், ஆயுதப்போராட்டம் நடந்த காலத்தில் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளும் அதனோடு பல்வேறுபட்ட தீர்வுத்திட்டங்கள் உருவாக்கப்பட்டபோதும் அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படாமல் அவை அனைத்தும் குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டமையுமே நடந்திருக்கின்றன.

சிங்கள, பௌத்த மேலாதிக்க அரசுகளினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் சமஷ்டிக்காக நீண்டகாலம் அறவழி போராட்டம் நடத்தி இயலாத பட்சத்தில் தனிநாடுகோரிப் போராடினார்கள். அதுவும் அடக்கி ஒடுக்கப்பட்டதன் காரணமாக மீண்டும் சமஷ்டிக் கோரிக்கை முன்னெழுந்தது. அதுவும் ஒரு நீண்டகால இழுபறியாக இருப்பதன் காரணத்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடு உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமைகளை முழுமையாக அமுல்படுத்தும்படி தமிழ் மக்கள் கோரிவருகின்றனர். இந்தியாவும் அதனையே இலங்கை அரசாங்கத்திற்கு வலியுறுத்துகின்றது.

ஆனால், பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில்கூட விருப்பமின்றி, ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஓர் அரசியல் சாசன திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, நாடாளுமன்றத்திற்குப் போகவேண்டும் என்று கூறுவதும் அங்கு பேசவேண்டும், இங்கு பேச வேண்டும் என்று கூறுவதும் அர்த்தமற்றதும் காலத்தை விரயமாக்கும் ஒரு செயற்பாடுமாகும்.

முன்னாள் சட்ட அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் 13ஆவது திருத்தம் என்பது அரசியல் சாசனத்தில் ஓர் அங்கம் என்றும், ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மீண்டும் நாடாளுமன்றம் போகவேண்டிய அவசியமில்லை என்றும் கூறியிருக்கின்றமையுடன், இவ்வாறு நடந்துகொள்ள முயற்சிப்பது உள்நோக்கம் கொண்டது என்றும் கூறியிருக்கின்றார்.

எதிர்க்கட்சியில் இருக்கும்பொழுது ஏதோ தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருப்பதுபோல் பேசுவதும் ஆளும் தரப்பிற்குப் போனவுடன் அவற்றை மறந்து செயற்படுவதும் முழு சிங்களத் தலைமைகளின் பழக்க தோசமாக இருக்கின்றது.

மங்களமுனசிங்க தலைமையில் ஒரு தீர்வுத்திட்டத்தை ஜனாதிபதி பிரேமதாஸ உருவாக்கினார். ஆனால் அதனை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்தார். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக தாம் ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்கி, பின்னர் அதனை நலிவடையச் செய்து, அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அங்கு ரணில் விக்கிரமசிங்க அந்த வரைவைத் தீயிட்டுக் கொளுத்த, சந்திரிகா பண்டாரநாயக அதனையும் கிடப்பில் போட்டுவிட்டார். பின்னர் மஹிந்த ராஜபக்ஷ தமது தலைமையில் திஸ்ஸ விதாரன ஆணைக்குழு என்ற குழுவை உருவாக்கி அவர்கள் கொடுத்த பரிந்துரைகளையும் அவர் குப்பைக்கூடைக்குள் வீசிவிட்டார். பின்னர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தரப்புடன் பதினேழு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அதுவும் காலத்தை விரயம் செய்யும் நோக்கத்தைக் கொண்டதாக இருந்ததே தவிர, அங்கும் எதுவும் நடைபெறவில்லை. பின்னர் ரணில் - மைத்திரி கூட்டு அரசாங்கத்தின் போது ஒரு புதிய அரசியல் சாசனம் உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதுவும் கிடப்பில் போடப்பட்டது.



இறுதியாக இந்தியாவின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையை அமுல்படுத்துவதற்கான ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்தத் தயாராக இல்லாதசூழ்நிலையை இன்றுநாம்அவதானிக்கின்றோம். பிரதமர்கள், ஜனாதிபதிகள், ஆளும்தரப்புக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் வாக்குகளின்மீது குறிவைத்தார்களே தவிர, அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதில் அவர்களுக்கு எத்தகைய ஆர்வமோ விருப்பமோ இருக்கவில்லை. மாறாக, இன்றும் கூட, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வடக்கு - கிழ்கில் நிலைநிறுத்துவதற்கான தொடர்ச்சியான பல்வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்களை அவர்கள் நடத்தி வருவதையே நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழிக்கும் உங்கள் நோக்கங்கள் அனைத்தையும் நாங்கள் இறுதிவரை எதிர்ப்போம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தமிழ் மக்களை அழித்தொழித்துவிடலாம் என்ற உங்களது நீண்டகால நடவடிக்கைகளில் எவ்வளவு அழிவைச் சந்தித்திருக்கிறீர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்களது தூரப்பார்வையற்ற, தேசப்பற்றற்ற கொள்கைகளும் நடவடிக்கைகளும் முழு இலங்கையையும் மிக மோசமான - மீளமுடியாத - பொருளாதாரச் சீர்குலைவிற்குள் கொண்டுசென்றுள்ளமையைக் கவனத்தில் கொள்ளுங்கள். நீங்கள் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்தும் முன்னெடுப்பீர்களானால் போராட்டகுணம் கொண்ட தமிழ் மக்கள் இறுதிவரை போராடுவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த நாட்டில் ஒரு நிலையான அரசியல் ஸ்திரத்தன்மை வேண்டுமா, இல்லையா என்பதை முடிவு செய்யுங்கள். - என்று உள்ளது. - என்று உள்ளது.

# மயிலந்தனைப் படுகொலையில் உயிரிழந்தோரின் நினைவேந்தல்



மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் மயிலந்தனை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

உயிர் நீத்தவர்களின் நினைவாக ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று, பொதுச் சுடரேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டமையுடன் உணர்வு பூர்வமாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறவுகளுக்கு நீதி கோரி, ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 09.08.1992 ஆம் ஆண்டு, புனானை மயிலந்தனை கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள்,பெண்கள் உட்பட 39 பேர் வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர். 34 பேர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவர்களுக்கான நீதி 31 வருடங்கள் கழிந்தும் இதுவரை கிடைக்கவில்லை என்பதனை எண்ணி மக்கள் கவலையடைகின்றனர்.

நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் புணானை இராணுவத்தினரே இப்படுகொலையை நிகழ்த்தினர் எனத் தெரிவித்து வழக்குத் தொடுக்கப்பட்டது.

அப்போது இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் 24 இராணுவத்தினர் அடையாளம் காட்டப்பட்டனர். வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எந்த ஓர் இராணுவத்தினரும் குற்றம் இழைக்கவில்லை என ஜூரி குழு ஏகமனதாகத் தீர்ப்பளித்தது.

மேன் முறையீடு செய்வதற்கு அப்போதிருந்த சட்டமா அதிபர் ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே 2002 நவம்பர் 27 இல் குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டனர்.

எனவே மீளவும் நீதிக்காக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலையகத் தமிழருக்கு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கோரிக்கையை இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சிய தூதுவர் லிசா வன்ஸ்டல் (Lisa Whanstall) லண்டனில் உள்ள தனது அரசாங்கத்துக்கு கொண்டு செல்வார் என நம்புகிறேன்.– என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முழு நாள் மலையகப் பெருந்தோட்ட மக்கள் தொடர்பான பிரேரணையை சமர்பித்து ஆரம்ப உரை நிகழ்த்திய சமயமே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

முன்னைய மற்றும் சமீபத்தைய கணக்கீடுகள் மற்றும் அறிக்கைகளில் இலங்கை மத்திய வங்கி, உலக வங்கி, ஐ.நா. உலக உணவு திட்டம், ஐ.நா. உணவு விவசாய நிறுவனம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, நவீன அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் டோமாயோ ஒபகடாஆகியோர், பெருந்தோட்ட வதிவாளர்களை ஒதுக்கப்பட்ட, நலிந்த, உரிமையற்ற சமூகமாக அடையாளம் கண்டுள்ளனர். மேலும் இன்றைய பொருளாதார நெருக்கடி இந்தப் பிரிவினரை, வறுமை, உணவுப் பாதுகாப்பிமின்மை, போசாக்கின்மை ஆகிய துறைகளில் மேலும் மோசமான மட்டங்களுக்குத் தள்ளியுள்ளது.

மலையகத் தமிழ் இலங்கையர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட பிரிவினர், இலங்கையில், 1823 முதல் இன்றுவரை 200 வருடங்களை நிறைவு செய்துள்ளனர். பெருந்தோட்ட மக்களின் வாழ்வு, ஏறக்குறைய ஒரே மாதிரியாக மாறாமல், முதலாம் 125 வருட பிரிட்டிஷ் ஆட்சி, இரண்டாம் 24 வருட பிரித்தானிய முடியாட்சிக்குக் கீழான சுதந்திர இலங்கை ஆட்சி, மூன்றாம் 51 வருட இலங்கைக் குடியரசு ஆட்சி ஆகிய மூன்று யுகங்களிலும் இருக்கின்றது.

இப்போது தெரிகின்ற ஒரே மாற்றம், வெள்ளை பிரிட்டிஷ் ராஜ்யத்தில் இருந்து, மாநிற பெருந்தோட்ட ராஜ்யத்துக்கு மாறியதுதான். இது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசில் நிலவும் வெட்கங்கெட்ட நவீன அடிமைத்துவம்.

பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் மிகவும் நலிவடைந்த பிரிவினராக மானிட வளர்ச்சியின் அனைத்து புள்ளி விவரங்களிலும் நாட்டின் ஏனைய மக்களை விட மிகவும் பின்தங்கியுள்ளனர்.

இலங்கைப் பெருந்தோட்டங்களில் நிலவும் நவீன அடிமைத்துவம் இந்த மக்களை, மனிதாபிமானமற்ற தாழ்நிலை வாழ்நிலைமைகள், அரைகுறை சுகாதார பாதுகாப்பு, போஷாக்கின்மை, மோசமான சிசு, கர்ப்பிணி மரணம், வறுமை, பெண்களின் மீதான அதி மோசமான சுமை, சிறுவர் தொழில், மோசமான பணி நிலைமைகள், குறைந்த சம்பளத்துடன் அதிக நேர வேலை, பாலியல் தொந்தரவு, உடல்ரீதியான மற்றும் வாய்மொழித் தாக்குதல் ஆகியவற்றடன் கூடிய வீட்டு வேலை, சுரண்டல் மற்றும் பாரபட்சம், பெருநிறுவன தோட்டங்களில், அரச தோட்டங்களில், தனியார் சிறு தோட்டங்களில் நியாயமற்ற தினக்கூலி முறைமை, தோட்ட நிர்வாகங்களின் ஒடுக்குமுறைக்குத் துணை போகும் பொலிஸ் அதிகாரிகள், சமமற்ற கல்வி வாய்ப்புகள், தரமற்ற கல்வி, பாடசாலைகளிலிருந்து மாணவர் இடை விலகல், சட்ட நீதியை பெறும் வாய்ப்பின்மை, மொழி உரிமையின்மை, வாழ்வதற்கும், வாழ்வாதாரத்துக்கும் நாட்டின் ஏனைய மக்களுக்கு கிடைக்கும் காணி உரிமை பெருந்தோட்ட மக்களுக்கு மறுக்கப்படுவது ஆகிய கொடுமைகளுடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளது.

மலையகத் தமிழ் இலங்கையர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட பிரிவினரின் சமூக பொருளாதார அந்தஸ்துகளை உயர்த்த, பௌத்த போதனைகள், விசேட ஒதுக்கீட்டு கொள்கைகள் அடிப்படையில், இன மற்றும் அரசியல் பேதங்களுக்கு அப்பால் கரங்கோர்க்குமாறு, இம்மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் என்ற முறையில், அரசாங்கத்தையும், சகோதர மக்கள் பிரதிநிதிகளையும் நாம் கோருகிறோம்.

அனுதாபங்களையல்ல, நியாயத்தையே நாம் எதிர்பார்க்கிறோம். இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் உள்வாங்கப்படும் இலங்கையின் முழுமையான பிரஜைகளாவதையே நாம் எதிர்பார்க்கிறோம்.

பெருந்தோட்டக் குடியிருப்புகள், இலங்கை தேசிய பொது நிர்வாக கட்டமைப்புகளுக்குள் கொண்டு வரப்பட்டு, போதுமான கிராம சேவையாளர் பிரிவுகளும், பிரதேச செயலக பிரிவுகளும் உருவாக்கப்பட்டு, நாட்டின் ஏனைய கிராமிய பிரதேச மக்களுக்கு இணையாக, பன்முகப்படுத்தபட்ட அரச சேவைகள் மற்றும் நலன்புரி சேவைக்களை பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்தி, பெருந்தோட்ட நிர்வாகங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து விடுபட்டு, முழுமையான பிரஜைகள் என்ற அந்தஸ்து கிராமிய, பிரதேச செயலக, மாவட்ட மட்டங்களில் உருவாக வேண்டும் என நாம் கோருகிறோம்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நடப்பில் உள்ள ஜனத்தொகை விகிதாசாரத்தை போன்று பெருந்தோட்ட பிரதேசங்களிலும் புதிய பிரதேச சபைகளை நிர்ணயம் செய்து உருவாக்கப்பட வேண்டும் எனவும் நாம் கோருகிறோம். – என்றார்.

# Pearl Island Inn

## Hotel & Restaurant




**Dine - in | Take Away**
**Soft Drinks | Soft Liquor**

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன் உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகளுடன் (Rooms) மற்றும் உலக தரம் வாய்ந்த யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் உணவு வகைகள் மற்றும் குளிர்பானங்களை இங்கிருந்தும் உங்கள் வீடுகளிற்கும் எடுத்து சென்று சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்.
மதுப்பிரியர்களை மகிழ்விக்கும் விதமாக Bar உம் திறக்கப்பட்டுள்ளது.

உங்கள்
S.Ubesegaran ( Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

தொடர்புகளுக்கு :
077 002 2088
021 222 2678

# சிறுவர் கழக மணவர்களுக்கான கல்விச் சுற்றுலா



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது – 12 ஆம் பிரிவைச் சேர்ந்த மெகா சிறுவர் கழகத்தின் தெரிவு செய்யப்பட்ட மணவர்களுக்கான ஒரு நாள் கல்விச்சுற்றுலா இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம், அம்பாறை ஓட்டுத் தொழிற்சாலை, சீனி உற்பத்தி தொழிற்சாலை, சிறுவர் பூங்கா போன்ற பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்தச் சுற்றுலா சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்தி உதவியாளர் யு.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இந்தக் கல்வி சுற்றுலாவில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத். ஏ. மஜீத், சமுர்த்தி உதவி முகாமையாளர் எம்.எஸ்.எம்.நௌஸாத், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. அன்சார் உட்பட சமுர்த்தி குழுக்களின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்பு

யாழ். ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் பகுதியில் ஆணொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த நபர் தூக்கில் தொங்குவதை அவதானித்த உறவினர்கள், அவரை மீட்டு காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அவரது சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் இராமலிங்கம் வசந்த குமார் (வயது 42) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணப் பொதிகள்



(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் முன்பள்ளிகளுக்கான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளைஅட்டாளைச்சேனைபிரதேசசெயலகத்தில் வைத்துப் பிரதேச செயலாளர் எம் ஏ சி அகமது ஷாபிர் வழங்கினார்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நகிஜா முசாபீர், பிரதமர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜெயந்தி பரமந்தி மற்றும் ஏனைய பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# ஓவியர் ஆசை இராசையாவின் 77 ஆவது ஜனன தின நிகழ்வு

புகழ்பூத்த ஓவியர் ஆசை இராசையாவின் 77 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு 'பிரம்மம்' என்ற தலைப்பிலான நினைவுகூரல் நிகழ்வு மற்றும் ஓவியக் கண்காட்சி என்பன அடுத்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (19-20) யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளன.

ஓவியர்களையும் ஓவியக் கலையையும் கொண்டாடும் விழாவாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைப் பேராசிரியர் தா.சனாதனன் தலைமையில் நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு கட்புலக் கலைகள் மற்றும் நிகழ்த்துகலைகள் பல்கலைக்கழகப் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பேராசிரியர் சரத்சந்திரஜீவாவால் வடிவமைக்கப்பட்ட ஓவியர் ஆசை இராசையாவின் உருவச்சிலையும் வைபவரீதியாக கையளிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன், விரிவுரையாளர் – ஓவியர்.பி.பிரசாந் ஆகியோரும் நிகழ்வில் வெவ்வேறு கருப்பொருளில் உரையாற்றவுள்ளனர்.

சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரமணராஜா நினைவுப் பேருரையினை ஆற்றவுள்ளார்.

ஓவியர் ஆசை இராசையாவின் வாழ்க்கையை மையப்படுத்திய நடன ஆற்றுகை ஆசிரியர் எஸ். ஸ்ரீகண்ணனின் நெறியாள்கையில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் காயத்ரியின் நெறியாள்கையில் அவருடன் இணைந்து ராகவி பங்குபெறும் பரதம் மற்றும் யோகாவின் தெய்வீக இணைப்பு என்ற ஆற்றுகையும் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கண்காட்சி நடைபெறும். சித்திர பாடத்தைப் பயிலும் மாணவர்களுக்கு இந்த நிகழ்வு பெரிதும் உதவும் என்பதால் மாணவர்களை இந்நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# 2000 நாள்கள் பூர்த்தியடைந்தன:
# நீதி கோரி மாபெரும் கவனவீர்ப்பு !







(பாறுக் ஷிஹான்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி நேற்றுமுன்தினம் புதன்கிழமை (09) மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த யுத்த காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது இரத்தச் சொந்தங்களுக்கு நீதி கோரி நேற்றுமுன்தினத்துடன்(09) 2000 நாள்கள் பூர்த்தியாகியதை முன்னிட்டு மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

வடக்கு - கிழக்கு இணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சமூகச்செயற்பாட்டாளர்கள்மற்றும்பொது மக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

# கற்கையை பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்



(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலக முஸ்லிம் கலாசார அலுவல்கள் பிரிவு இணைந்து ரமழான் மாதம் அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலில் நடத்திய கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக முஸ்லிம் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.எம்.முக்தார் ஹுசையினின் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சாரின் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் ராசித் யஹ்யா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கற்கை நெறியின் முடிவில் 49 மாணவர்கள் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வின் அதிதிகளாக பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், வலயக் கல்வி அலுவலக உதவிப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம். நிஹ்மதுள்ளாஹ், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். உவைஸ் அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ். எம்.சபீஸ், செயலாளர் எம்.பி.அப்துல் ஹமீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஏ.எல்.தாஹிர், கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எல்.தௌபீக், ஐ.எல். றிஸ்வான், என். நவப்பிரியா, மற்றும் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.எச். ஜெய்னுதீன், முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் எம்.ஏ.எம். இப்றாலெப்பை, மத்தியஸ்த சபை உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஹமீட், பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சங்கீதன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இஸ்மத், அந்நூர் நிறுவன செயற்பாட்டாளர் எம்.ஏ.எம். ஜனூஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனை அல் மிஸ்பாஹ் வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

( எம்.என்.எம்.அப்ராஸ்)

திருகோணமலை மெகெய்ஸர் மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டியின் பெட்மிண்டன் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 16 வயதுப் பிரிவில் விளையாடிய கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்று பாடசாலை வரலாற்றில் முதன் முறையாகத் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பயிற்றுவித்து வழிகாட்டிய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர்களான ஏ.ஜே.எம்.சஸான், எம்.ஏ.எம்.றிஸ்மி, எம்.எம்.புஹாரி மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான ஏ.ஜே.எம். சாபித், எம்.ஜே.எம்.முபீத், மேலும் இம் மாணவர் அணியினரின் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு பெட்மிண்டன் விளையாட்டுத் தளத்தை வழங்கிய கல்முனை வின்னர்ஸ் பட்மின்ரன் கோட் உரிமையாளர் ஆகியோருக்கு பாடசாலைச் சமூகம் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.




# கல்முனை மாநகர வீதிகளில் இடையூறு ஏற்படுத்தும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

## கல்முனை மாநகர சபை அறிவிப்பு

(ஏ.எஸ்.மெளலானா)

கல்முனை மாநகர வீதிகளில் வாகனப் போக்குவரத்துக்கும் பாதசாரிகளின் நடமாட்டத்துக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்முனை மாநகர சபை அறிவித்துள்ளது.

கல்முனை- அக்கரைப்பற்று, கல்முனை- மட்டக்களப்பு நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பிரதான வீதியோரங்களில் வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகள், விளம்பரப் பதாகைகள் மற்றும் விற்பனைப் பொருள்களும் பெருமளவில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இவை நடைபாதைகளையும் வடிகான்களையும் ஆக்கிரமித்திருப்பது மாத்திரமல்லாமல் அவற்றையும் தாண்டி வீதிகளையும் ஆக்கிரமித்துள்ளன. அனுமதிக்கப்படாத தெருவோர அங்காடி வியாபாரங்களும் இங்கு நடைபெறுகின்றன.

அத்துடன் வீதிகளில் வாகனங்களை நீண்ட நேரம் தரித்து வைப்பதும் நடமாடும் வியாபார வாகனங்களை நிறுத்தி வைத்து வியாபாரம் மேற்கொள்வதும் சாதாரணமாக இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளால் வீதிகளில் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுவதுடன் விபத்துகளும் சம்பவிக்கின்றன. வீதியோரமாக பாதசாரிகள் நடந்து செல்வதற்குக் கூட இடமின்றி அசௌகரியங்களையும் ஆபத்துகளையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறான இடையூறுகள் மற்றும் ஆபத்தான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் வீதிகளை ஒழுங்குபடுத்தி, அழகுபடுத்தும் நோக்கிலும் மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொலிஸார் இணைந்து உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்முனை மாநகர சபை மேலும் தெரிவித்துள்ளது.

# மோடி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை தோல்வி!

## - மக்களவையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு





பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லா பிரேரணை தோல்வி அடைந்துள்ளது.

எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்ததால் நம்பிக்கையில்லா பிரேரணை மீது குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தீர்மானம் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த ஜுலை 20 ஆம் திகதி தொடங்கியது. மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி அறிக்கை தாக்கல் செய்ய வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்தனர்.

இதற்கிடையே, மணிப்பூர் கலவரம் தொடர்பாக மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி சார்பில் மக்களவையில் நம்பிக்கை இல்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த தீர்மானத்தின் மீதான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது . 2 ஆம் நாளாக புதன்கிழமையும் விவாதம் தொடர்ந்தது. இதில் காங்கிரஸ், தி.மு.க., ஆம் ஆத்மி, கொம்யூனிஸ்ட், சமாஜ்வாதி, என்.சி.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினர். இதற்கு பதில் அளித்து மத்திய அமைச்சர்கள், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியிருந்தனர்.

இந்த நிலையில், மூன்றாவது நாளான நேற்று நம்பிக்கை இல்லா பிரேரணையின் மீதான விவாதங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி பதிலளித்துப் பேசினார்.

நம்பிக்கை இல்லா பிரேரணைக்கு பிரதமர் மோடி பதிலளித்துக் கொண்டிருந்தபோதே ராகுல் காந்தி, சோனியா காந்தி வெளியேற, அவர்களுடன் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. வெளியே வந்த சோனியா காந்தியிடம் செய்தியாளர்கள் வெளிநடப்பு குறித்து கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர், என் கட்சி இது குறித்து விளக்கும். பிரதமர் மணிப்பூர் பிரச்சினை பற்றி பேசவே இல்லை என்று தெரிவித்துள்ளார்.

## மாணவியை முட்டிய மாடு!



சென்னை - அருகம்பாக்கம் பகுதி இளங்கோ வீதியில் நடந்து சென்ற பாடசாலை மாணவியை மாடு கொடூரமாக தாக்கும் காட்சி சமூக வளைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டு வருகின்றது.

அந்த காணாளியில், சிறுமி அவரது தாயாருடன் பாடசாலை சென்று கொண்டிருக்கும் போது குறித்த மாடு தாக்கியுள்ளது.

தாயின் கண் முன்னால் மாடு சிறுமியை முட்டிய போது அந்த மாட்டை கட்டுப்படுத்த பலரும் முயற்சித்தும் முடியவில்லை. தொடர்ச்சியாக குறித்த சிறுமியை காயப்படுத்தி கொண்டே இருந்தது.

இதன்போது பெரும் முயற்சியில் பலர் கல் மற்றும் மரக் கட்டைகளை பயன்படுத்தி அந்த சிறுமியை படுகாயங்களுடன் மீட்டு எடுத்துள் ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமி தற்போது அருகம்பாக்கம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என தெரியவந்துள்ளது.

## மோடி நினைத்தால் இரண்டே நாட்களில் மணிப்பூர் பிரச்சினையை தீர்க்க முடியும்!

### - ராகுல் காந்தி குற்றச்சாட்டு



பிரதமர் நரேந்திர மோடி நினைத்தால் இரண்டே நாட்களில் மணிப்பூர் பிரச்சினையை தீர்க்க முடியும், ஆனால் அவர் அதை விரும்பவில்லை என ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜஸ்தானில் நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரசாரத்தை தொடங்கும் விதமாக பன்ஸ்வாரா மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

குறித்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மணிப்பூர் விவகாரத்தை குறிப்பிட்டு பா.ஜ.க. அரசை கடுமையாக சாடியிருந்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பா.ஜ.க.வின் சித்தாந்தம் மணிப்பூரை கொளுத்தி விட்டது. அந்த தீ 3 மாதங்களுக்கும் மேலாக எரிகிறது. மக்கள் கொல்லப்படுகிறார்கள், குழந்தைகள் கொல்லப்படுகின்றனர். பெண்கள் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக் கப்படுகின்றனர்.

மணிப்பூரில் எரியும் தீயை அணைக்க பிரதமர் விரும்பினால் இந்திய இராணுவத்தின் மூலம் 2 அல்லது 3 நாட்களில் அதை செய்துவிட முடியும். ஆனால் அவர் அதை விரும்பவில்லை. மாறாக தீயை எரிய வைக்க விரும்புகிறார் என்று ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

# துனிசியாவில் அகதிகள் படகு கவிழ்ந்ததில் 3 சிறுவர்கள் அடங்கலாக 41 பேர் பலி!



துனிசியா அருகே அகதிகள் படகு கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடமேற்கு ஆப்பிரிக்க நாடான துனிசியாவில் இருந்து இத்தாலியை நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகு, சிசிலி நீரிணைப் பகுதியில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்து நால்வரை மால்ட்டா நாட்டு கொடியுடன் பயணித்த ரிமானோ சரக்குக் கப்பலில் இருந்தவர்கள் மீட்டுள்ளனர்.

2 ஆண், ஒரு பெண், பெரியவர்கள் துணை இல்லாத ஒரு சிறுவன் ஆகிய அந்த நால்வரும், இத்தாலியின் கடலோர காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை சிசிலி தீவான லாம்பெடு ஸாவில் உள்ள முகாமிற்கு இத்தாலிய கடலோரக் காவல் படையினர் புதன் கிழமை அழைத்துச் சென்றுள்ளனர்.

விபத்தில் உயிர் பிழைத்தவர்களிடம் நடத்திய விசாரணையில், கடலில் கவிழ்ந்த படகில் மேலும் 41 பேர் இருந்த தாகவும், அவர்கள் அனைவரும் நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 3 சிறுவர்களும் அடங்குவதாக மீட்கப்பட்டவர்கள் கூறியுள் ளனர். அண்மைக் காலமாக, துனிசியாவி லிருந்து இத்தாலியை நோக்கிச் சென்ற ஏராளமான அகதிகள் படகுகள் விபத்திற்குள்ளானதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு மட்டும் இதுவரை துனிசியா வழியாக 93,000-இற்கும் மேற்பட்டவர்கள் இத்தாலிக்கு கடத்தி வரப்பட்டதாக புள்ளிவிபரங்கள் தெரி விக்கின்றன.

## பைடனுக்கு கொலை மிரட்டல்: சந்தேகநபர் ட்ரம்பின் ஆதரவாளர்!




அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர் சுட்டு கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆதரவாளர்களும், தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் ஆதரவா ளர்களும் சமூக வலைத்தளங்களில் கடுமையான கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

அதில் அமெரிக்காவின் உடா மாநிலத்தை சேர்ந்த க்ரெய்க் ராபர்ட்ஸ ன் என்ற ட்ரம்பின் ஆதரவாளர் ஒருவர் தனது முகநூல் பக்கத்தில் ஜனாதிபதி பைடனை குறித்து தீவிரமான கருத்துக்களை பதிவு செய்திருந்தார்.

பைடன் தொடர்பில் கடந்த 2022ம் ஆண்டு இவர் வெளியிட்ட பதிவு ஒன்றில் ஜனாதிபதியை கொலை செய்வதற்கான நேரம் வந்துவிட்டது, முதலில் ஜோ, பிறகு கமலா என குறிப்பிட்டிருந்தார்.

அதுமட்டுமல்லாமல் முன்னாள் ஜனாதிபதி டொனால்டு ட்ரம்பிற்கு எதிராக கிரிமினல் வழக்கு ஒன்றை தொடர்ந்த மன்ஹாட்டன் மாவட்டத்தை சேர்ந்த வழக்கறிஞர் ஆல்வின் ப்ராக் என்பவரையும் கொல்லப் போவதாக கூறியிருந்தார்.

இதைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜோ பைடன் உடா மாநிலத்திற்கு வருகை தருவதால் தனது எம்24 ஸ்னைப்பர் வகை துப்பாக்கியை உபயோகப்படுத்தும் காலம் வந்து விட்டது என்றும் குறித்த நபர் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த பதிவில் பலவகை துப்பாக்கிகளையும் அவர் பதிவிட்டி ருந்தார்.

இந்நிலையில் உடா மாநிலத்தில், ப்ரோவோ எனும் இடத்தில் உள்ள கொலை மிரட்டல் விடுத்த வீட்டிற்கு தேடுதல் மற்றும் கைது நடவடிக்கைகளுடன் அமெரிக்க மத்திய புலனாய்வு அதிகாரிகள் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், குறித்த கைது நடவடிக்கையில் க்ரெய்க் ராபர்ட்ஸன் சுட்டுக்கொல்லப்பட்டார் என தெரிவிக் கப்படுகிறது.

எனினும் க்ரெய்க் சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவம் தொடர்பான முழு விவரங்களையும் அதிகாரப்பூர்வமாக அமெரிக்க அரசு இன்னும் வெளியிட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹவாய் காட்டுத்தீ: 36 பேர் பலி!



அமெரிக்காவின் ஹவாய் தீவுக ளில் உள்ள மவுயி தீவின் நகரமான லஹைனாவின் ஏற்பட்ட பயங்கர காட்டுத்தீயால் இதுவரை 36 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியா கியுள்ளன.

இதுமட்டுமன்றி 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த தீவிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் இந்த தீயால் நூற்றுக்கணக்கான கட்டிடங்க ளும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

லஹைனா நகரில் கடந்த 08 ஆம் திகதி அதிகாலையில் காட்டுத்தீ பற்றி எரியத் தொடங்கியது. இதனால் மவுயி தீவில் உள்ள 35,000 க்கும் மேற்பட்ட மக்கள், வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆபத்தில் உள்ளதாக ஹவாய் அவசரநிலை மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

மவுயி தீவில் பலத்த வேகத்தில் வீசிய காற்று சற்று குறைந்துவிட்டதால் தற்போது தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக களமிறங்கியுள்ளனர்.

இந்த காட்டுத்தீயினால் மவுயி தீவில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் காட்டுத்தீயை அணைத்து, மீட்புப்பணியை தீவிரப்ப டுத்துமாறு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.08.2023




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் முயற்சி மூலம் இலக்கை அடைவீர்கள்.உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும்.இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை தரத்துடன்முடித்துத் தருவீர்கள். பணியிடத்தில் உங்கள் திறமையின் மூலம் நற்பெயரை எடுப்பீர்கள்.உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக இருப்பீர்கள். அவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வீர்கள்.இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணப்புழக்கம் காணப்படும். புதிய முதலீடுகளில் பணத்தை சேமித்து பயனடையலாம்.

இன்று நல்ல ஆரோக்கியமும் தன்னம்பிக்கையும் காணப்படும். அதனை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்..




இன்று வளர்ச்சி குறைவாக காணப்படும். பெரிய லட்சியங்களை அடைய இன்று சாத்தியம் குறைவாக இருக்ககும். சிறப்பாக திட்டமிட்டால் இன்று வெற்றி அடையலாம்.

உங்கள் மேலதிகாரிகளால் எதிர்பாராத தொல்லைகள் ஏற்படும். கடினமான பணிகள் காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் மனதில் அசௌகரியமான உணர்வு இருக்கும்.இது உங்கள் துணையுடனானா உறவின் நல்லிணக்கத்தை பாதிக்ககும்.

பணவளர்ச்சி திருப்திகரமாக இருக்காது.இன்றைய செலவுகளை சமாளிக்க இயலாது. திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

ஒவ்வாமை காரணமாக தொண்டையில் பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று அமைதியாக மகிழ்ச்சியாக இருங்கள். வெற்றி பெறுவதற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி காணப்படாது. உறுதியுடனும் கவனமாகவும் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் சகஜமாக இருக்க இயலாது. அவரை வெளியிடங்களுக்கு கூட்டிச் செல்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். அதிக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

வயிறு உபாதைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும். கார உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.




இன்று அமைதியாக இருக்க வேண்டிய நாள்.தெய்வீகப் பாடல்களை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதலைப் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு குறைந்து காணப்படும். பெண் ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

உங்களுக்கு சில குடும்ப பிரச்சினைகள் காணப்படும். இதனால் உங்கள் பிரியமானவருடன் நேரத்தை கழிக்க இயலாது. உங்களால் முடிந்த அளவு அவருக்கு நேரம் ஒதுக்குங்கள்.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும்.மேலும் பண இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கண்காணியுங்கள்.

தொற்று காரணமாக கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற கொள்வது சிறந்தது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கியமான முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

நீங்கள் குறைந்த நேரத்தில் விரைவாக பணியை முடிப்பீர்கள். இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். நீங்கள் தொழில் சார்ந்த அணுகு முறையைக் கையாள்வீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது.

இன்று அதிக அளவு பணம் காணப்படும்.அதை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பதன் காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




குறைந்த முயற்சியில் உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். இன்று நகைச்சுவை போக்கின் காரணமாக சிறந்ததை சாதிப்பீர்கள்.

சிக்கலான பணகளைக் கூட எளிதில் கையாள்வீர்கள். இன்று உங்களுக்கு புதிய பணிகள் வழங்கப்படும். நீங்கள் அதனை விரும்பி செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறையை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

உங்களிடம்அதிக பணம் காணப்படும்.எளிதில் சேமிக்க இயலும்.எதிர் காலத்திற்கென சிறிது பணத்தை ஒதுக்குவீர்கள்.

இன்று நீங்கள் மிகுந்த ஆற்றலுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள்.உங்கள் நேர்மறையான போக்கு உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




விஷயங்களைக் கையாள்வதில் நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். இன்று சிறிதளவு பொறுமைஅவசியம்.

இன்று அதிக பணிச்சுமை காணப்படும். ஆனால் முறையான திட்டமிடல் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். உங்கள் சக பணியாளர்களை புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.என்றாலும் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு வளர சுமாரான வாய்ப்புகளே உள்ளன.

சிறிய கடன் மூலம் உங்களுக்கு பணம் கிடைக்கும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.

இன்றுபயணத்தின்போதுஅல்லதுவாகனம்ஓட்டும்போது விபத்தை சந்திக்கநேரலாம். எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சற்று சிரமமான நாள். இன்று பொறுமையும் உறுதியும் மிகவும் அவசியம். சரியான திட்டமிடல் மிகவும் அவசியம்.

இன்று பணிச்சூழல் பரபரப்பாக காணப்படும்.உங்கள் சக பணியாளர்களுடன் சில சிக்கல்கள் காணப்டும். உங்கள் பணிகளை திட்டமிடுவது நல்லது.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான விவாதம் காரணமாக நீங்கள் சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள்.அமைதியாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சியை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்றும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சேமிக்க இயலாது.அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தேவையற்ற விஷயங்களுக்காக இன்று உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள்ஆரோக்கியம் பாதிக்கப்படும்.எனவே உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.08.2023




பிரார்த்தனை மற்றும் தியானம் இன்று உங்களுக்கு வழி காட்டும். அதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சி பெறுவீர்கள். இன்று அனைத்தும் உங்கள் கைகளில் தான் உள்ளது.

பணியிடச் சூழல் சவாலானதாகவும் போட்டியுடையதாகவும் காணப்படும். கடினமாக பணிகளைக் கையாள்வதை சவாலாக உணர்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் சமூகமான உறவு காணப்படாது. தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதிநிலைமை கவலையளிப்பதாக இருக்கும். இன்று பணப்புழக்கம் சீராக இருக்காது. இன்று செலவுகள் அதிகம செய்ய நேரலாம்.

இன்று நல்ல ஆரோக்கியத்துடனும் அமைதி யுடனும் காணப்படுவீர்கள்.பிரார்த்தனை மேற்கொள் ளுங்கள்.இசையைக் கேளுங்கள்.




இன்று நீங்கள் அமைதியான அனுசரனையான போக்கை மேற் கொள்ள வேண்டும். இதனால் வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. வெற்றியும் கிடைக் கும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக காணப்படும். இதனால் தவறுகள் நேரலாம். இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று உங்கள் துணையுடனான உறவில் சுமூகமான சூழ்நிலை காணப்படாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பணத்தை கவனமாக கையாள வேண்டும். இல்லாவிடில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற கவலைகள் காரணமாக உங்களுக்கு தோள்களில் மற்றும் முதுகில் வலி ஏற்படலாம்.




இன்று உங்களிடம் தைரியமும் உறுதி யும் காணப்படும். இதனால் வளர்ச்சி காணப்டும். தைரியமான மனவலிமை காரணமாக வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் அபாரமான வளர்ச்சி காணப்படுகின்றது. பணியின மூலம் ஆதாயம்பெற இந்த நாளை பயன்படுத் திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத் திக் கொள்வீர்கள். பிறருக்கு உதாரணமாகத் திகழ்வீர் கள். அன்பு நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய முதலீடுகள் செய்வதற்கு உகந்த நாள். அதன் மூலம் மிகுதியாக பணம் கிடைக்கும். அதன் மூலம் நீங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இன்று மிகவும்ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்களுடைய நேர்மறையான எண்ணங்கள் காரண மாக நீங்கள் இன்று திடமாக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சிக்கலான சூழ்நிலைகளை சமாளிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய சூழலில் சிறப் பாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

விரைந்து பணிகளை முடிக்க உங்கள் சக பணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். பணிகள் அதிகமாக இருப்பதால் கட்டுப்படுத்துவது உங்கள் கைமீறிய செயலாக இருக்கும். உங்கள் திறமையை பணியிடத்தில் வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

உங்களின் அகந்தைப் போக்கும் பிடிவாதமும் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். சூழ்நிலைக் கேற்ப நீங்கள் உங்கள் துணையுடன்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

சில தேவையற்ற சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியிருக்கும். அத்தகைய சூழலில் பணம் செலவு செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறையும்.

ஒவ்வாமை காரணமாக சளி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்து உடல் நலத்தை காத்துக் கொள்ள வேண்டும்.

